# LAABH SAMACHAR

Volume: 08 Issue : 03 **JUNE 2019** Tamil & English Monthly Price: Rs. 10/-




## Individual Villas at **Madurai** for ***24 Lakhs****

- DTCP Approved 140 Villas Layout
- Located at Airport -Thirumangalam Ring Road
- 24 Hours Security
- Suitable for Retirement Homes
- Solar Powered Villas
- Drinking Water Connection
- 40' and 30' Roads
- 3 Times Food Served at Home^
- Temple at Site

Registration and Service Connection Charges Extra

Call 90808 38798

Energy Livingscapes
Value . Fortune . Pride

**HEAD OFFICE :**
Plot No 264, LIG Colony,
Off Lake View Road , KK Nagar ,
Madurai - 625 020
Contact : 81108 11180
Email: info@energyls.in




Program on "Gift an Organ"



Program on "Empowerment of Investment"



Program on "Digital Marketing & e-Commerce"

**SITCON** – Sourashtra Industrial Trade Conference – August 2,3 & 4 2019

| Venue | Trade Fair | Conference |
|---|---|---|
| Raja Muthaiah Mandram A/C Hall | 02, 03 & 04 Aug. 2019 | 03 & 04 Aug. 2019 |




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536




அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016
LASER CARE
Printer Service
Toner Refill
TONER REFILL
1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com
hp
Canon


AQUA DIAMOND RO
Sales & Service
All Company RO Water Purifier Service and exchange available
Thirukonda M. Vishnukumar
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com

## SOURASTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS 2017-2019

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Imm. Pt. President | 96552 34409 |
| **Office Bearers** | | |
| M.K. Kaladhar Babu | President | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Vice President | 99949 26348 |
| T.R. Mohanram | General Secretary | 93441 01432 |
| K.K. Dinesh | Treasurer | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K. Vijay Babu | Joint Secretary | 98942 10055 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| **E.C. Members** | | |
| T.K.D. Mohan | | 98430 52530 |
| J.S. Sayee Jeevan | | 90809 51577 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| P.M. Murali | | 94434 68476 |
| S.G. Srinivasan | | 91500 99456 |
| T.N. Suriyaprakash | | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | | 93443 04980 |
| S.K.B. Chandraprakash | | 98655 45048 |
| A.R. Ganesan | | 98421 75804 |
| B.S. Janaarthanan | | 97905 75650 |
| G.R. Subramanian | | 94427 52044 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| **Editorial Board** | | |
| J.S. Sayee Jeevan | Chairman | 95004 40811 |
| N.S. Prem Kumar | Member | 99944 35350 |
| K.S. Sivakumra | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

## நமஸ்கார்...

மீண்டும் மோடி என்ற முழக்கத்தின்படி நம் பாரதம் முழுவதும் மோடியின் அலை சென்ற மக்களவை தேர்தலை விட அதிக அளவில் வீசியுள்ளது. பண மதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி போன்ற காரணங்களால் சரிவை சந்திக்க நேரிடும் என்கிற சவாலை முறியடித்துள்ளார். அவர் பாரதத்தின் மீது கொண்டுள்ள அளவில்லா தேசப்பற்றும், சீர்மிகு நிர்வாகமும், பயனுள்ள பல திட்டங்களை நிறைவேற்றியதும் அவரை மீண்டும் ஆட்சியில் அமர வைத்துள்ளது. பாரத தேசத்தை நல்வழிப்படுத்த புதிய திட்டங்களை அடுத்த ஐந்தாண்டுகளில் மீண்டும் கொண்டு வர வேண்டும்.

சிட்கான் மாநாட்டின் பிரவுச்சர் வெளியீட்டிற்கு பிறகு, ஸ்டால் பதிவிற்கும், மலரில் விளம்பரம் அளிக்கவும் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். 50 சதவீத ஸ்டால்கள் பதிவுகள் தற்போது நிறைவுபெற்றள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் விரைவில் பதிவு செய்துகொள்ளவும். அதோடு, விழா மலரில் விளம்பரம் செய்ய விரும்புவோர் சேம்பர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள விரும்புகிறேன்.

சிட்கான் மாநாட்டின் குழுவினர்கள் மிக ஆர்வத்துடன் பணியாற்றி வருகின்றனர். சிட்கான் மாநாட்டிற்கு ஆதரித்து நன்கொடை அளித்து வரும் மாபெரும் மனதுடைய சமூக மற்றும் தொழில் முன்னோடிகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் ஆதரவு சேம்பரை வளரச் செய்யும்.

சிட்கான் மாநாட்டில் கலந்து கொள்வோர் தங்களின் பெயர் விபரங்களை பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

நன்றி — **- M.K. கலாதர் பாபு**

## திருக்குறள்

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து**

சௌராஷ்டிர மொழியில்: ப[3]கஸொக்ர்ஹா ப[3]ந்த்[4]ஹேறானு காலு து[3]ஸதெக்
வகஸொக்ர்ஹா வாட்ஹேறானு லெக்கு

**பொருள்:** (காலத்துக்காகக் காத்திருப்பதும் வாய்ப்பு நேர்ந்தால் உடனே செய்வதும் எப்படியிருக்க வேண்டுமென்றால்) ஒரு கொக்கு தன் இரைக்காகக் காலங்கருதி சிறிதும் அசைவில்லாமல் வாடியிருப்பதுபோல் இருக்க வேண்டும். வாய்ப்பு வந்தவுடன் அந்தக் கொக்கு நறுக்கென்று மீனைக் கொத்திக்கொள்வதைப் போல் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

அதிகாரம் 49 — காலம் அறிதல் (காரியம் செய்யத்தக்க காலத்தை அறிவது) — அரசியல்



## பொதுச்செயலாளர் அறிக்கை

*உலகத்தினர்களுக்கு வணக்கம்*

15.05.2019 – உடல் உறுப்புகள் தானம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஹாலில் நடைபெற்றது. CII அமைப்பின் ஒரு பிரிவான Young India - Madurai Chapter உடன் நமது சேம்பர் இணைந்து இந்த கூட்டத்தை நடத்தியது. சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக Dr. D. **ஷ்யாம்** M.S., M.CH., Apollo Speciality Hospitals, Mdu அவர்கள் கலந்து கொண்டார்.

21.05.2019 – முதலீடு குறித்த சிறப்புக் கூட்டம் நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஹாலில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பேரா. T.S. **வித்யாசாகர்** M/s. Thimma International Management Academy, Mdu. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர்பாபு** அவர்கள் தலைமை தாங்கினார்.

04.06.2019 – டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் இ–காமர்ஸ் குறித்த தொழில்நுட்ப வளர்ச்சிக்கான கூட்டம் நமது சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் தலைவர் திரு. M.K. **கலாதர்பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்புப் பேச்சாளராக திரு. R.K. **பிரேம்நாத்** M/s. Imex Business Solutions, Mdu. அவர்கள் கலந்து கொண்டார்.

– T.R. **மோகன்ராம்**



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*உலகத்தினர்களுக்கு வணக்கம்*

பாரதப்பிரதமராக மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளார் திரு. நரேந்திர மோடி அவர்கள். தன் தொலை நோக்குப்பார்வையாலும், அரசியல் நல்ல பல திட்டங்களாலும் அனைவரையும் கவர்ந்துள்ளார். அவரது அடுத்த ஐந்தாண்டு சேவைகள் சிறக்க சேம்பர் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

நம் சமூகத்தில் திறமையான மாணவர்களை நீட் தேர்வின் மூலம் மருத்துவத்துறையில் ஈடுபடுத்த நம் சமூக ஆர்வலர்கள் நீட் தேர்விற்கான பயிற்சி மையத்தை உருவாக்க முன் வர வேண்டும். இதனால் அவர்களின் திறமை வெளிப்படும். நம் மாணவர்களுக்கு மருத்துவத்துறையில் எளிதில் இடம் கிடைக்க வழிவகுக்கும்.

சிட்கான் 2019 மாநாட்டின் பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. சிட்கான் மாநாட்டின் விழா மலரில் விளம்பரம் செய்ய சேம்பர் அங்கத்தினர்கள் ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

– J.S. **சாயீ ஜீவன்**

ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமியின் பாடல்கள் அர்த்தங்கள் (தமிழில்)

நிச்சு ஸ்ரீ ஹரி ப4ஜன் கார் மொன்னு



ஏ மனமே! நாளும் ஸ்ரீ ஹரி பஜனை செய்வாயாக, மோட்சம் அடைய அதைத் தவிர வேறு வழியில்லை. அதுவே உயர்ந்த வழி. வெட்கத்தை விட்டு அச்சுதா? கோவிந்தா? என்று உரக்கக் கூவு. ஹரி பஜனையை விட்டு விட்டு என்ன தவம் செய்யினும் யாது பயன்? எண்ணற்ற பாங்களைச் செய்த வான்மீகியின் பாவங்கள் எந்தத் திரு நாமத்தால் நீங்கின என்று சிந்தித்துப் பாருங்கள்.

– தொடரும்

## இரங்கல்



மதுரை காமராஜ் பல்கலையின் ஓய்வுபெற்ற தமிழியற் புல ஒருங்கிணைப்பாளரும், தமிழறிஞரும், நம் சமூகத்தைச் சேர்ந்தவருமான பேரா. **இரா. மோகன்** அவர்கள் கடந்த 12.06.2019 காலமானார். அன்னாரை பிரிந்து வாடும் அவர்களின் குடும்பத்திற்கு நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறது.





Shri. Bala V Katti
Chairman
BVK GROUP OF COMPANIES
BVK FOUNDATION
BVK Foundation
Presents
6th ANNUAL Sourashtrian Achievers Award 2019
AUGUST 4TH 2019
RAJAMUTHIAH MANDRAM @ MADURAI
AWARD CATEGORY
Best Student
Best Sport Person
Best Artist
Best Cultural Heritage Propagator
Outstanding Professional
Best Business Innovator
Best Educational Institution
Outstanding Woman Achiever
Best Social Worker
Life Time Achievements Award
ஸௌராஷ்டிரா
சாதனையாளர்கள் விருது
சிறந்த மாணவர்
சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனை
சிறந்த கலைஞர்
சிறந்த கலாச்சார பாதுகாவலர் / அமைப்பு
தொழில் வியாபாரத்தில் புதுமை புகுத்தியவர்கள்
திறமையான துறை வல்லுநர்
சிறந்த கல்வி நிறுவனம்
சிறந்த சீர்மிகு பெண்மணி
சிறந்த சமூக சேவகர் / அமைப்பு
வாழ்நாள் சாதனையாளர்
Best Compliments from
BVK GROUP OF COMPANIES
Indowind Energy Ltd | Indus Finance Ltd
Everon Power Ltd | BeKae Props. P Ltd
Nomination are invited from 2019-20 achiever's
awards@bvkgroup.com
Contact: Mr. S.R.Vidyasagar
9940085452
For more details please visit
www.bvkawards.com
BVK Foundation Kothari Building 4th Floor, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.

# உடல் உறுப்பு தானம்

## விழிப்புணர்வு கூட்டம்




Confederation of Indian Industry(CII) அமைப்பின் ஓர் பிரிவான யங் இந்தியன்ஸ் (Young Indians-Madurai Chapter)–ம், GIFT AN ORGAN அமைப்புடன் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இணைந்து உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு கூட்டத்தை கடந்த 15.05.2019 அன்று சேம்பர் அலுவலகத்தில் நடத்தியது.

சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக Dr. D. **ஷ்யாம்** M.S., M.CH., Apollo Speciality Hospitals, Mdu. மற்றும் திரு. L. **சேவுகன் அண்ணாமலை** Chair, Gift an Organ ஆகியோருடன், YI Madurai Chapter உறுப்பினர்கள் திரு. S.M. **மணிகண்டன்.** திருமதி. **பூர்ணிமா வெங்கடேஷ்** மற்றும் திரு. **வினோத்** ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய YI Madurai Chapter உறுப்பினர் திரு. **வினோத்** அவர்கள் உதவியாக இருந்தார். சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்கள் வரவேற்புரை அளித்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. **சேவுகன் அண்ணாமலை** அவர்கள் பேசுகையில், இன்றைய வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சியில், அவசர உலகில் உடல் உறுப்புதானம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து பேசினார். Dr. D. **ஷ்யாம்** அவர்கள் பேசுகையில், எவையெல்லாம் உடல் உறுப்பு தானமாக கொடுக்கலாம், ஒருவர் இறந்ததும் உடல் உறுப்புகள் எவ்வளவு மணி நேரத்தில் இயங்கும் போன்ற விபரங்களை அளித்தார். அத்துடன், மூளைச்சாவு என்பது குறித்து பேசினார். இதயம் இயக்கம் நின்றால் மட்டுமல்ல, மூளையின் இயக்கம் நின்றுவிட்டாலும் அதற்கு பெயர் மரணம் தான் என்று இன்றைய மருத்துவ விஞ்ஞானிகள் தெரிவிப்பதாக கூறினார்.

கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கியும் பொன்னடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டது. நன்றியுரையாற்றியபின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# முதலீட்டு முறைகள்



பலர் தொழில் செய்து வந்தாலும், தொழிலின் மூலம் நாம் ஈட்டிய லாபத்தை பெருக்க முதலீடுகளை நாடுவதும் உண்டு. அவ்வாறு நாடுவோர், புதிதாக முதலீடு செய்ய விரும்போருக்கு அந்த முதலீடுகள் குறித்த முறையான தகவல்களை அளித்திடவும், அதன் பயன்கள் போன்ற விபரங்களை ஆர்வமுள்ள நம் சேம்பர் அங்கத்தினர்களுக்கு தெரிந்துகொள்ளவும் முதலீடு குறித்த ஒரு சிறப்புக் கூட்டத்தை நமது சேம்பர் கடந்த 21.05.2019 அன்று சேம்பர் அரங்கத்தில் மாலை 6 மணி அளவில் நடத்தியது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக பேராசியர். T.S. **வித்யாசாகர்** M/s. Thimma International Management Academy, Madurai, Resource Persion of SEBI அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்கள் இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினர் திரு. T.S. **வித்யாசாகர்** அவர்கள் கலந்து கொண்ட அங்கத்தினர்களிடம் கேள்வி பதில்கள் மூலம் முதலீடு குறித்து விவாதித்தார். கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு. T.S. வித்யாசாகர் அவர்களுக்கு நினைவுப்பரிசினை வழங்கி கௌரவித்தது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.




# டிஜிட்டல் மார்க்கெட்டிங் & இ-காமர்ஸ்



டிஜிட்டல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இன்றைய சூழலில், பலர் டிஜிட்டல் முறையில் வர்த்தகத்தை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். அதன் காரணமாக சேம்பர் சார்பாக டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் இ-காமர்ஸ் என்ற தலைப்பிலான கூட்டம் கடந்த 04.06.2019 அன்று மாலை 6.30 மணி அளவில் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர்பாபு** அவர்கள் தலைமை தாங்கினார். டிஜிட்டல் வர்த்தகம் குறித்து பேச திரு. R.K. **பிரேம்நாத்** M/s. Imex Business Solutions, Madurai அவர்கள் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார்.

சேம்பர் தலைவர் திரு. M.K. **கலாதர் பாபு** அவர்களின் வரவேற்புரைக்குப்பின் பேசிய சிறப்பு விருந்தினர் திரு. R.K. **பிரேம்நாத்** அவர்கள் பேசினார். அவர் டிஜிட்டல் மார்க்கெட்டிங் குறித்து பேசுகையில், நம் தயாரிப்பு பொருட்களை ஃபேஸ் புக், இண்டியாமார்ட், பிலிப் கார்ட், இ-மெயில் போன்றவற்றின் மூலமாக எவ்வாறு விளம்பரப்படுத்துவது, செலவே இல்லாமல் கூகுள் Search Engine-ல் முதலாவதாக நம் நிறுவன பெயரை முதலில் கொண்டு வருவது போன்ற தகவல்களை வழங்கினார்.

இ-காமர்ஸ் குறித்து பேசுகையில், ஆன்லைன் மார்க்கெட் மற்றும் ஆன்லைன் ஷாப்பிங் குறித்து வேறுபாடுகளை அளித்தார். எந்த மாதிரியான நிறுவனம், எதில் விளம்பரம் செய்தால் பலன் கிடைக்கு என்பது போன்ற பல்வேறு தகவல்களை வழங்கினார்.

மேலும் அவர் கூறுகையில், டிஜிட்டல் முறையில் வர்த்தகம் செய்ய விரும்புவோர் முதலில், அவருக்கென்று ஒரு தனி இணையதளம் (வெப்சைட்) இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாதவர்கள், குறைந்த செலவிலும், செலவே இல்லாமலும் (இலவசமாக) தாம் உருவாக்கித்தருவதாக தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.

பலர் தங்களது சந்தேகங்களை கேட்டனர். மழை என்ற போதிலும், கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சிறப்புப்பேச்சாளருக்கு சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இறுதியாக நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

---

அலோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

August 2,3 & 4 2019



குமரன் B ஐகுவா

சிட்கான் மாநாட்டு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்டால்கள் இதுவரை 50 சதவீதத்திற்கு பதிவாகியுள்ளது. விழா மலரில் விளம்பரம் அளிக்க பலர் முன் வருகின்றனர். பணிகள் முழுமையடைய சேம்பர் அங்கத்தினர்களின் ஆதரவை மேலும் எதிர்பார்க்கிறேன். தொழில் முன்னோடிகள், சமூக முக்கிய பிரமுகர்கள் தங்களின் நன்கொடைகளை அளித்து தங்களின் ஆதரவை தெரிவிக்கின்றனர். அங்கத்தினர்கள், விளம்பரம், ஸ்டால் போன்றவற்றில் பங்களிக்க விரும்புகிறேன்.

தற்போது சிட்கான் மாநாட்டு நிகழ்ச்சிகள், தொழில் கருத்தரங்கு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து அனைவருக்கும் மாநாட்டின் அழைப்பிதழ் வீடு தேடி வரும்.

மாநாட்டி கலந்து கொள்பவர்கள் எண்ணிக்கையை அறிந்து கொள்ளவும், அவர்களிடம் கட்டணம் பெறாமல் உணவு ஏற்பாடு செய்ய நமது சேம்பர் அங்கத்தினர்களின் பெயர் விபரங்கள் பதிவு செய்யப்படுகிறது. நமது சேம்பர் அலுவலத்தினர் தங்களை தொடர்பு கொள்வர். கலந்து கொள்ளும் அங்கத்தினர்கள் தங்கள் விபரங்களை அளிக்கவும். மாநாட்டிற்கு அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டுகிறேன். நன்றி.




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

# ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# விரைவில் புதிய தொழில் கொள்கை

கூடுதல் பெரும்பான்மை பலத்துடன் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியின் புதிய தொழில் கொள்கை விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து மூன்றாவது முறையாக வெளியிடப்படவுள்ள இப்புதிய தொழில் கொள்கையில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேலும், ஆலைகளின் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை புகுத்துவதற்கும், இணையதள நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் இப்புதிய கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.5 சதவீதமாக உள்ள தயாரிப்பு துறையின் பங்களிப்பை 25 சதவீதமாக அதிகரிக்கும் வகையிலான புதிய தொழில் கொள்கையை வடிவமைக்கும் பணி கடந்த 2016-ம் ஆண்டே தொடங்கப்பட்டுவிட்டது. அதற்கு ஏதுவாக, வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கான சலுகைகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையில் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்ற நிறுவனங்களின் உறுதிமொழி ஆகியவற்றின் அடிப்படையில் புதிய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.

மின்னணுப் பொருள்கள், தொலைத்தொடர்பு கருவிகள், மின் உபகரணங்கள், மருந்து தயாரிப்புக்கான மூலப் பொருள்கள் ஆகியவை பெருமளவு இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக, நமது நாட்டின் இறக்குமதி செலவினம் கணிசமாக அதிகரித்தது. இதற்கு தீர்வு காணும் வகையில், இறக்குமதிக்கான தெளிவான மாற்றுத் திட்டங்களை இப்புதிய தொழில் கொள்கையில் மத்திய வர்த்தக அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளதாக தெரிகிறது.

தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையால் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய தொழில் கொள்கையில் வரிகளை குறைந்த விகிதத்தில் மாற்றியமைக்கவும், தொழில் தொடங்க எளிதில் நிதி கிடைப்பதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம், தொழில் முனைவோர் எளிதில் தங்களது தொழில்களை கட்டமைத்து நிர்வகிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி சீரமைப்பு என்று வரும்போது, ஜி.எஸ்.டி மற்றும் நிறுவன வரி ஆகிய இரண்டையுமே சீர்தூக்கிப் பாத்து தகுந்த அளவில் நிர்ணயிக்க வேண்டும். அத்துடன் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் நிதி உதவிக்காக தனி அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என புதிய தொழில் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கன்றனர். தொழில்துறை அமைச்சக அதிகாரிகள்.

தொழில் புரட்சி 4.0-வின் முக்கிய இலக்கு, தயாரிப்பு துறையில் செயற்கை நுண்ணறிவு, இணையதளம், ரோபாட்டிக்ஸ் ஆகிய தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதாகும். இது தொழில் துறைக்கு ஊக்கமளிப்பதாக இருந்தாலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்பது சவாலானதே. இந்த நிலையில், அந்நிய நேரடி முதலீட்டு கொள்கைகளை நாம் மறு ஆய்வுக்கு உட்படுத்துவது அத்தியாவசியமானதாக கருதப்படுகிறது.

இதன்மூலம், இந்திய தொழில் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை அதிக அளவு தக்க வைத்துக்கொள்வதுடன், தாய் நிறுவனங்களிலிருந்து தொழில்நுட்பங்களையும் பெற முடியும் என்கின்றனர் அதிகாரிகள்.

மதிப்புக் கூட்டு தொழில்முறையில் கவனத்துடன் முன்னேற வேண்டும். இது, உள்ளூர் தொழில் மட்டுமின்றி, பெரிய நிறுவனங்கள் தங்களது பல்வேறு தொழில் கிளைகளை இங்கே உருவாக்கப் பேருதவியாக அமையும் என்கின்றனர் தொழில் துறை அமைச்சக அதிகாரிகள்.

தற்போது மூலப் பொருள்களுக்கான வரி விகிதம் அதிகமாகவே உள்ளது. இதற்கு நிதி அமைச்சகத்திடம் கலந்தாலோசித்து விரைவாக தீர்வு காணப்பட வேண்டும். இப்பிரச்னை வரும் பட்ஜெட்டில் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வர்த்தக அமைப்பின் வரிவிதிப்பு கொள்கைகளின் கெடுபிடியால், உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்கும் கொள்கையை செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தங்களது உள்நாட்டுத் தொழில் ஊக்குவிப்பை வெற்றகரமாக மேற்கொண்டு வருகின்றன.

எனவே, அது போன்ற சாத்தியக்கூறுகள் இருக்குமெனில் நாமும் அதனை செயல்படுத்த தயங்கக் கூடாது என்பதே தொழில்துறை அமைச்சக அதிகாரிகளின் கருத்தாகும்.

– தினமணி







**Flat Offer Inclusive of Flight Tickets + Free Gift Voucher**




6D/5N -24999/- 5D/4N-25699/- 4D/3N -24750/- 4D/3N -27499/-




5D/4N -29399/- 3D/2N -9999/- 6D/5N -25750/- 5D/4N -36999/-

# BOUT TRIP HOLIDAYS

## Contact K K Vignesh Babu - 8760066555

330, Anna Nagar 80 feet Main Road, 7th Floor, Madurai - 625020.

Singapore, Malaysia, Dubai, SriLanka, Europe, USA, Australia, New Zealand,South Africa, Cambodia & India.

Office: 0452-4959440 www.bouttrip.com Email:support@bouttrip.com

OPEN 24 HOURS

# கடைகள், வர்த்தக நிறுவனங்கள் திறக்க தமிழக அரசு அனுமதி

ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்களைத் திறந்து வைக்க வகை செய்யும் உத்தரவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மேலும், இரவு நேரங்களில் பணியாற்றும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கான உத்தரவை தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர் சுனில் பாலீவால் அண்மையில் பிறப்பித்தார். அந்த உத்தரவு விவரம்:

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிகள் மற்றும் பணிச் சூழலை ஒழுங்குபடுத்துவது குறித்த மாதிரி மசோதாவை மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சக செயலகம் கடந்த 2016–ம் ஆண்டு ஜீன் மாதம் அனுப்பியிருந்தது. இந்த மாதிரி மசோதாவில் மாநிலங்கள் தங்களின் தேவைகளுக்கு ஏற்ப அதில் திருத்தங்கள் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

24 மணி நேரம் – ஆண்டு முழுவதும்: மாதிரி மசோதாவில் உள்ள முக்கிய அம்சமாக, ஆண்டின் அனைத்து நாள்களிலும் 24 மணி ரேநமும் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களை திறந்து வைத்து இயக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இரவு நேரங்களில் பணியாற்றும் பெண்களின் கண்ணியத்துக்கு இழுக்கு ஏற்படாத வகையில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு, இடம், ஓய்வறை, கூடுதல் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதிரி மாசோதாவைச் செயல்படுத்தும் வகையில், தமிழகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்களை இயக்கிட அனுமதிக்கலாம் என்று மாநில தொழிலாளர் நல ஆணையர் அரசுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, முதல் கட்டமாக மூன்று ஆண்டுகளுக்கு 24 மணி நேரமும் கடைகளைத் திறந்து வைக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

- கடைகள் அல்லது வணிக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வாரத்துக்கு ஒரு நாள் சுழற்சி முறையில் விடுமுறை அளிக்க வேண்டும்.
- அவர்களுக்கு விடுமுறை அளிக்கும் நாள் குறித்த விவரங்களை கடைகள், வணிக நிறுவனங்களில் வெளிப்படையாகத் தெரியும் வகையில் ஒட்ட வேண்டும்.
- ஊழியர்கள், பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் கூடுதல் நேரத்தில் பணியாற்றினால் அதற்கான தொகை உள்ளிட்டவற்றை சேமிப்புக் கணக்கிலேயே வரவு வைக்க வேண்டும்.
- ஒவ்வொரு ஊழியருக்கும் தினமும் எட்டு மணி நேரத்துக்கு மேல் பணி அளிக்கக் கூடாது. வாரத்துக்கு 48 மணி நேரம் மட்டுமே பணி வழங்க வேண்டும். அதே சமயம், கூடுதல் பணி நேரம் அளிக்கலாம். அது நாளொன்றுக்கு வேலை நேரத்தையும் சேர்த்து பத்தரை மணி நேரத்தைத் தாண்டக் கூடாது. வாரத்துக்கு மொத்த பணி நேரம் 57 மணி நேரமாக மட்டுமே இருக்க வேண்டும்.
- நிர்ணயிக்கப்பட்ட இந்தப் பணி நேரத்துக்கு அதிகமாக பணிகளை அளித்தால் சம்பந்தப்பட்ட வேலை அளிக்கும் நிறுவனத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
- சாதாரண சூழ்நிலைகளில் பெண் பணியாளர்களிடம் இரவு 8 மணிக்கு மேல் பணிகளை அளிக்கக் கூடாது. தேவை ஏற்படும் நிலையில், பெண் பணியாளர்களிடம் இரவு 8 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை அவர்களின் ஒப்புதலைப் பெற்று பிறகே அளிக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையில், அவர்களின் கண்ணியம், கௌரவம் ஆகியன பாதிக்காத வகையில் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும்.
- இரவு நேரத்தில் பணிபுரியும் பெண்களுக்கு தகுந்த போக்குவரத்து வசதிகளை அளிக்க வேண்டும். மேலும், அவர்களுக்கு ஓய்வறை, கழிவறை, பாதுகாப்பு அம்சங்களை வேலை வழங்கும் நிறுவனங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்கும் வகையில், அதற்குரிய சட்டத்தின் கீழ், ஒவ்வொரு நிறுவனமும் தனியாக குழுவை அமைக்க வேண்டும்.

– தினமணி


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி,
மதுரை – 1.
Ph : 2320536
100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901
ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

## ஜி.எஸ்.டி ரீ∴பண்டுக்கு ஒற்றை சாளர முறை நிதி அமைச்சகத்தின் புதிய திட்டம்

ஜி.எஸ்.டி ரீ∴பண்ட வழங்குவதற்கான ஒப்புதலை இனி ஒரே ஒரு ஆணையம் வழங்கினால் போதும் என்ற புதிய திட்டத்தை நிதி அமைச்சகம் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்றுமதியாளர்கள் தங்களுக்கான ஜி.எஸ்.டி ரீ∴பண்டை தாமதமின்றி பெற முடியும்.

தற்போது ஜி.எஸ்.டி ரீ∴பண்டுக்கான ஒப்புதலை மத்திய மற்றும் மாநில ஜி.எஸ்.டி ஆணைய அதிகாரிகள் இருவரும் அளிக்க வேண்டும். இதனால் ஜி.எஸ்.டி ரீ∴பண்ட பெறுவதில் தாமதம் ஏற்பட்டு வந்தது. இந்த தாமதத்தினால் ஏற்றுமதியாளர்களுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்படுவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரச்சினையை சரி செய்யும் வகையிலேயே இந்தப் புதிய திட்டம் உருவாக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் அமலுக்கு வரும் பட்சத்தில் ஜி.எஸ்.டி ரீ∴பண்டுக்கான நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட்டு துரிதமாகவே ரீ∴பண்ட கிடைப்பதற்கு வழிசெய்யும். இந்தத் திட்டத்தின்படி, மத்திய அல்லது மாநில வரித்துறை அதிகாரிகளில் யாரேனும் ஒருவர் ஒப்புதல் அளித்துவிட்டாலேயே, வரி செலுத்துவோர் தங்களுக்கான முழு ரீ∴பண்டையும் பெற்று விட முடியும். பிறகு, மத்திய மற்றும் மாநில ஜி.எஸ்.டி ஆணையங்கள் தங்களுக்கிடையிலான பரிவர்த்தனைகளை நிவர்த்தி செய்து கொள்ளும்.

இந்தப் புதிய திட்டம் வரிசெலுத்துவோருக்கு மிக பயனுள்ளதாக இருக்கும். ஜி.எஸ்.டி ரீ∴பண்ட உடனடியாக தரப்படுவது அவர்களுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்கிறது. இதனால் தொடர்ந்து வர்த்தகம் செய்வதற்கான சூழல் உருவாக்கப்படுகிறது. இந்தத் திட்டம் வர்த்தகத்தில் பெரிய மாற்றங்களை கொண்டு வரும் என்று ஏஎம்ஆர்ஜி அண்ட் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் இணை உரிமையாளர் ராஜாத் மோகன் கூறியுள்ளார். – *தி இந்து (தமிழ்)*

## வைகைப் பெருவிழா



வைகை நதியின் புனிதம் காக்கவும் அதற்குப் பெருமை சேர்க்கவும் அகில பாரதீய துறவியர்கள் சங்கம் வைகைப் பெருவிழாவை 2019 ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 4 வரை பன்னிரண்டு நாட்கள் விமரிசையாக நடத்த இருக்கிறது.

இதில் துறவியர்கள், சாக்தம், கிராமக் கோயில் பூசாரிகள், பசு பாதுகாப்பு, சைவம், வைணவம், முத்தமிழ் – இளைஞர்கள், நதிநீர் பாதுகாப்பு – விவசாயிகள், காயத்ரி பரிவார் மற்றும் அனைத்து சமுதாய அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மாநாடுகள் இந்த நாட்களில் விமரிசையாக நடக்க இருக்கின்றன. காடுகளையும் மரங்களையும் அழித்து ஆற்றங்கரைகளை ஆக்கிரமித்து, ஆற்று மணலைக் கொள்ளையடித்து நீர் இல்லா உலகிற்கு காட்டாற்று வெள்ளத்தின் வேகம் போன்று நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

மேலும் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்தும் நீர் நிலைகளில் குப்பைக் கூளங்களைக் கொட்டி அதை இல்லாமல் செய்வதும் ரசயானக் கழிவு நீர் மற்றும் சாக்கடைகளை நேரடியாக நீர்நிலைகளில் கலப்பதும் போன்ற காரணங்களால் வைகை முதலான நதிகள் வறண்டு காணப்படுகின்றன.

இதைப்பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த வைகை பெருவிழா நடைபெற உள்ளது. தொடர்புக்கு: 94868 47005, 97867 36994, 94865 45618

– ஈரோடு கிருஷ்ணமாச்சாரி


பதிவு எண்: 16 / 2002
☎ 0452-2679676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com
நிறுவனர்கள் M.S. சந்திரசேகர் 98421-44555 | J.R. ரமேஷ் 97861-40570 | B.J. மகேசுவர்லால் 93444-51607 | T.R. குமரன் 94437-23337 | M.R. பிரேம்குமார் 93444-51605



GO Natural Healthy Food
PASS ON பாஸ் ஆன்
இரசாயன பொருட்கள் கலக்காத
நாட்டுச் சர்க்கரை
Natural Jaggery
Benefits of Organic Jaggery
1. Rich in iron and prevents Anemia.
2. Aids in digestion and prevents constipation.
3. Strengthens Bones. 4. Good Source of Energy.
5. Prevents from Respiratory Problems.
6. Grown without chemical pesticides and Fertilizers
7. Organic Jaggery does not contain chemical preservatives synthetic colours and artificial flavouring.
100% Pure Original
Repacked / Marketed by : PRIYA AGENCY
Plot No. 24-B, Kurivikaran Salai, Anna Nagar, Madurai - 20
Cell : 94438 81901, 98429 22005

# வங்கி ரெப்போ விகிதம் குறைப்பு, ஆன்லைன் பரிவர்த்தனை கட்டணங்களும் ரத்து – ரிசர்வ் வங்கி

ஆன்லைன் பண பரிவர்த்தனைகளுக்கு வசூலிக்கும் கட்டணங்களை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளது. இதன் பயன் வாடிக்கையாளர்களை சென்றடையும் வண்ணம் வர்த்தக வங்கிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரிசர்வ் வங்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி காந்த தாஸ் தலைமையில் நிதிக்கொள்கை குழு 06.06.2019 அன்று கூடியது. இந்தக் கூட்டத்தில் வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் ரெப்போ 0.25 சதவீதம் குறைக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் ரெப்போ 6.00 சதவீதத்தில் இருந்து 5.75 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் இந்த நடவடிக்கையால் வீடு, வாகனக் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்களுக்கான வட்டி விகிதங்களை மற்ற வர்த்தக வங்கிகள் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் வேறு பல பொருளாதார முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதன் விபரம்:

- வாடிக்கையாளர்கள் ஆன்லைன் மூலமாக RTGS மற்றும் NEFT பண பரிவர்த்தனைகள் செய்வதற்கு தற்போது வங்கிகள் வசூலித்து வரும் கட்டணம் ரத்து செய்யப்படுகிறது.
- இதன் பயன் வாடிக்கையாளர்களை சென்றடையும் வண்ணம் வர்த்தக வங்கிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- வங்கிகளின் ஏடிஎம் கட்டணங்களை வரன்முறை படுத்துவது தொடர்பாக ஆலோசிக்க குழு ஒன்றையும் அமைக்கவுள்ளது. இந்தியன் வங்கியின் தலைவர் தலைமையிலான வர்த்தக வங்கிகள் கூட்டமைப்பு இதுகுறித்து ஆய்வு செய்து பரிந்துரை அளிக்கும்.
- நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி விகித இலக்கை 7.2 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைக்கப்படுகிறது.
- பணவீக்க விகிதம் நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் 3.0 சதவீதமாகவும், இரண்டாவது அரையாண்டில் 3.4 சதவீதம் முதல் 3.7 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

*– தி இந்து (தமிழ்)*



• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Fire Alarm • Audio & Video Door Phones
Safety! Security!! Surveillance!!!
A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom
Head Office : No. 45, Kakkathoppu Street, Town Hall Road, Madurai - 1. Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633
Branch Office : 66, Kamarajar Street, Opp. Keelavasal Bus Stop, Madurai - 9. Cell : 73737 82633
Prop.: B.S. Rajan

உன்னத தரம் ! உயர்வான ருசி !!

Available in : 15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml
சாரதி
நல்லெண்ணெய்

Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in


CRYSLER
SANITARYWARE
www.crysler.in
designer & world class sanitary
CRYSLER
CITRA
the wellness of water
VSB ENTERPRISES
320/4A, Vallanatha Puram,
Avaniyapuram By Pass Road, Madurai - 625 012.
E-mail : vsb.mdu@gmail.com
JFP. T.R.K.Baalajee Sai
88706 64984
PLASTIC PRODUCTS | SANITARY WARE | KITCHEN SINK | ALLIED BATH FITTINGS | BATH ACCESSORIES


அவோ! மிளோ!! ஹொரடோ!!!
SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2019
A Business Conference with Seminars & Exhibition
மாபெரும் வர்த்தக கண்காட்சி
மற்றும் வர்த்தக கருத்தரங்கம்
EXHIBITION
2, 3 & 4 August 2019
அனுமதி இலவசம்
Organised by
SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI
CONFERENCE
3 & 4 August 2019
Registration Free
BVK AWARDS
on 4-8-2019 at 6.00 pm
FM Partner
98.3 FM RADIO MIRCHI
Awareness for Organ Donation
RUN
on 03-08-2019, at 6.00 a.m.
Raja Muthiah Mandram
Opp. to Dist. Court Madurai

# EXHIBITION

Date : 2,3 & 4 August 2019
(Friday, Saturday & Sunday)
Time : 10.00 am to 8.00 pm

## Stall Layout




## அனுமதி இலவசம்

## STALL TARIFF

| Stall | Size | Tariff | Stall Nos. |
|---|---|---|---|
| **ECO Stall** | 3.25' x 6.5' | ₹ 10,000 | 28 to 37 |
| **ECO Prime** | 3.25' x 6.5' | ₹ 11,000 | 27 & 38 |
| **Superior Stall** | 6.5' x 6.5 | ₹ 20,000 | 2-14, 16-25, 40-49, 52-62, 63-76 |
| **Prime Stall** | 6.5' x 6.5 | ₹ 22,000 | 1, 15, 26, 39, 50, 51, 62 |
| **Corporate Stall** | 15' x 20' | ₹ 70,000 | 77 - 80 |

## DISCOUNT

| | |
|---|---|
| **Member / Repeats** | 10% |
| **Early Bird Offer** (on or before June 30th) | 15% |

**Available Amenities**

Table - 1    Chairs - 2

Plug Point & Tube Light

Contact : Stall Committee Chairman
**B.S. Janaarthanan**
Mobile : 95433 15650

## SITCON 2019 - DONORS

| | |
|---|---|
| Platinum Donor | ₹ 2,00,000 |
| Diamond Donor | ₹ 1,00,000 |
| Golden Donor | ₹ 50,000 |
| Silver Donor | ₹ 25,000 |

*Donation Exempted*
U/S 80G (5) (VI) IT Act. 1961
Vide Order No. C.No. 464/28/07.08/ CIT-1 dt. 04.11.2009
*Donors are Eligible for Special Recognition and Privileges in SITCON 2019*

### Bank Details for Payment

*All payment by Cheque / DD / NEFT / RTGS or Demand Draft in favour of*

*SOURASHTRA CHAMBER OF COMMERCE*

State Bank of India, City Branch, Madurai
A/c No. 30134805614
IFSCode No : SBIN0000988

Contact : Finance Committee Chairman
**K.K. Dinesh** Mobile :98421 16461

## Souvenir Advt. Tariff
(Fully Multi Colour)

Page Detail

| | |
|---|---|
| Back 1st Wrapper Outer | ₹ 25,000 |
| Back 1st Wrapper Inner | ₹ 20,000 |
| Front 1st Wrapper Inner | ₹ 20,000 |
| Back 2nd Wrapper Outer 2 Nos | ₹ 15,000 |
| Back 2nd Wrapper Inner 2 Nos | ₹ 13,000 |
| Inner Full Page | ₹ 5,000 |
| Inner Half Page | ₹ 3,000 |
| Page Marker | ₹ 20,000 |

Printing Detail

| | |
|---|---|
| Book Size | : 11" x 8.5" |
| Full Page Design Size | : 9" x 7" |
| Half Page Design Size | : 4.5" x 7" |
| Inner Art Paper | : 100 gsm |
| Wrapper Art Board | : 300 gsm |

Contact : Souvenir Committee Chairman
**J.S. Sayee Jeevan**
Mobile : 95004 40811
Email : sourashtra.chamber@gmail.com

# GST ரியல் எஸ்டேட் - புதிய வரி விதிப்பு

ரியல் எஸ்டேட் என்ற நிலம் மற்றும் அதன் மீதான கட்டுமானப் பணிகள் அது வழங்கும் சேவை நமது இந்திய பொருளாதாரத்தில் பெரிய இடத்தில் உள்ளது. அது வழங்கும் சேவை மீதான வரி தொகுப்பு அளப்பரியது. Real Estate Sector மீது புதிய வரி விதிப்பு 01.04.2019 முதல் அமல் விவரம்:

- வரி வரவு இலக்கு 2018-19 நிதி ஆண்டுக்கான GST மூலமாக மறைமுக வரி வரவு ரூ. 11.47 லட்சம் கோடி என அரசு நிர்ணயித்துள்ளது. ஆனால் மார்ச், 2019க்கு மட்டும் ரூ. 1 லட்சம் கோடிக்கு மேல் கிடைத்துள்ளது. ஆக 31.03.2019 வரை நிர்ணயிக்கப்பட்ட இலக்கு (ரூ. 11.47 கோடி லட்சம்) வரவில்லை இருப்பினும் 2019-20ம் நிதி ஆண்டுக்கான இலக்கு ரூ. 13.71 லட்சம் கோடி ஆகும்.
- நில உரிமை வளர்ச்சி, நில உரிமை மாற்றம் என்பது Real Estate பிரிவுக்கான ஆதாரம்.
- வீடுகள் கட்டுமானப் பணிகள் மீது GST 5% வரி. ஆனால் உள்ளீட்டு வரி வரவு இல்லை. இதில் நிலத்தின் மதிப்பும் உண்டு.
- இந்த வீட்டு கட்டுமானப் பொருட்களை 80% இனங்களை GST பதிவு பெற்றவரிடமிருந்து வாங்கப்பட வேண்டும். மீதி 20% பொருட்கள் மீது எதிர்மறை கட்டணம் RCM-க்குட்படும். (RCM application to 20% of such purchases)
- இந்த 5% வரி விதிப்பில் மனை அல்லது நிலம் என்பதை கட்டுபவருக்கு மாற்றலில் GST வரி இல்லை. இது ஒரு நல்ல சலுகை.
- ஆனால் கட்டி முடிக்கப்பட்ட இதில் நிறைவுச் சான்று (Completion Certificate) வழங்கிய பின் விற்கப்படும் வீடுகளுக்கான நில மதிப்பு பங்கு என்பதன் மீது (Proportionate Share) 18% வரி உண்டு. இதனை தெளிவு செய்ய வேண்டும்.
- 80%க்கு கீழே உள்ள கொள்முதலுக்கு 5% வரிக்குறைப்பு இராது. ஆனாலும் இதற்கு 18% வரி எனத் தெரிய வருகிறது. நிபந்தனை விவரம் பார்க்க வேண்டும். மேற்குறிப்பிட்ட விவரங்கள் காரணமான 31.03.2019க்கு முன்னர் நடப்பில் இருந்து கட்டுமானப் பணிகள் 01.04.2019 முதல் புதிய திட்டத்திற்கு மாறி இருக்க வேண்டும்.
- ஆக, நிலத்தின் மீதமான விவரம் தனியே காட்டப்படாததால் ஒட்டு மொத்த செலவுகள் மீது 12% வரியும் ITC பெறும் வகையில் மாற்றம் இருக்க வேண்டும். இதனை GST கவுன்சில் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- 80% இனங்களுக்கும் கீழே உள்ள கொள்முதலுக்கு எதிர்மறை வரி 18% வரி உண்டு. இந்த வகையிலான கொள்முதல்கள் பதிவு நபரிடமிருந்து வாங்கினாலும் அந்த விற்பனையாளர்கள் பிரிவு 16ன் கீழ் வரி செலுத்தி இருக்க வேண்டும். இது ஒரு சிக்கல் பிரச்சனை ஆகலாம்.
- அரசின் நோக்கம் அனைவருக்கும் வீடு கிடைக்க வேண்டும் எனில் GST-யில் வரி சீரமைப்பு செய்தால் மட்டுமே ரியல் எஸ்டேட் பிரிவில் அனைத்து பிரிவு சேவைகளில் வரி 100% கிட்டும். இதனால் மட்டுமே இறுதிப் பயன் என்பது கட்டிடம் மற்றும் வீடு வாங்குவோருக்குப் போய்ச்சேரும்.

ரியல் எஸ்டேட் நிலம் சார்ந்த கட்டிடப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் எதிர்பார்ப்பு என்ன?

- 2019-2020க்கு ஆன GST நடைமுறைகள் சட்ட திருத்தம், நில உரிமை மாற்றம் வரி விகிதம் மற்றும் ITC பெறுவதில் எளிமைத் தன்மை இருக்க வேண்டும். இந்த சமூக ஆதாரத்துறை (Basic Structural Services) இன்னும் பலன் உள்ள சேவைகளைத் தொடர வாய்ப்பு உண்டு. அதனை நோக்கி இந்த எளிய நடைமுறைகளை செயல்படுத்தினால் பயன் உள்ள சேவைகள் மக்களுக்கு கிடைக்கும். அதே போல் அரசுக்குரிய வரிகளையும் ஒருங்கே பெறலாம்.
- இந்த துறை பல தடைகளையும் அல்லல்களையும் தாண்டி வந்துள்ளது. இன்னும் தீர்ப்பு கிடைக்காது திண்டாடி வரும் இந்த துறையினரின் சேவைகளை அரசு கவனமாக கனிவான பார்வையை செலுத்தினால் வேலைவாய்ப்பும் வரி வரவும் பெருகும்.
- நலிந்து வந்துள்ள இந்த வீடு கட்டுமானப் பணிகளுக்கு உள்ள தடைகள் நீக்கப்பட்டு எளிதானால் விற்கப்படாத வீடுகள், கட்டிடங்கள் விரைவில் பணமாக மாறும், அதன் தொடர்பாக புதிய பணிகளுக்குரிய மூலதனம் / மற்றும் இடுபொருட்கள் வாங்குவதால் விற்பனையாளரின் வணிகம் மேம்படும். புதிய கட்டுமான திட்டங்களுக்கு (New Projects) புதிய ஆட்களின் வேலைவாய்ப்பு, தொழிலாளர் தேவை பெருகும். கட்டிடப் பொருள் - சிமெண்ட், கண்ணாடி, மின் பொருள், மரம், பெயிண்ட், இதர Building Materials மீதான தேவை மற்றும் வணிகம் மேம்படும்.
- ரியல் எஸ்டேட் தொழிற்பிரிவினர் மேம்பாடு கருதி அண்மையில் மத்திய அரசு அறிவித்துள்ள முக்கிய சட்ட திருத்தத்தின் அறிவிப்பில், (அறிவிப்பு ஆணை நம். 3/2019 CTR(Rate). dated 29.03.2019) இதில், 28.06.2017 அன்றைய ரியல் எஸ்டேட் கட்டுமான பணிகள் மீதான வரி விகிதத்திற்குப் பதிலாக புதிய வரி விகிதம் 0.75, 3.75, 6%, 9% எனத் திருத்தப்பட்டன.

